**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 301/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | திரு. சுப்ரமணியன் |
| Father's Name/Husband Name: | திரு. கந்தசாமி |
| Village : | மங்கூன் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 56 /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 5 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். கடந்த 04.12.2022ம் தேதி காலை 08.00 மணியளவில் ஞாயிற்று கிழமை அன்று நானும் எனது அண்ணி கனகம் என்பவரும் மாடு மேய்க்க போய் கொண்டிருந்தேன். அப்போது ராமன் செட்டியார் வந்து இங்கே எதற்கு மாடு மேய்க்கிறாய் என்று எனது அண்ணியை தடியால் அடித்துவிட்டார். அதை நான் தட்டிக் கேட்டபோது நீ என்னடா தேவிடியா பய கேட்குற நீ என்ன சப்போட்டா என்று அசிங்கமாக எதிரி அண்ணாமலை என் கழுத்தை பிடித்துக் கொண்டார், கோவிந்தன் என்னை தள்ளிக்கொண்டு போய் கையிலும், காலிலும் என்னைத் தடியால் அடித்துவிட்டார். எதிரிகள் அண்ணாமலை, கோவிந்தன், ராமன் செட்டியார் மற்றும் இரண்டு மருமகள்கள் மற்றும் செட்டியாரின் மனைவி என கூட்டமாக இருந்ததால் நாங்கள் இருவரும் அங்கிருந்து தப்பித்து ரோட்டிற்கு சென்றோம். பின்னர் தெரிந்த நபர் ஒருவருக்கு போன் செய்து காரில் பெரம்பலூர் அரசு

மருத்துவமனைக்கு சென்றோம். சிசிச்சையிலிருக்கும்போது போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்ததா என்றால் இல்லை. எந்த குச்சியால் எங்களை எதிரிகள் தாக்கினார்கள் என்றால் என்ன குச்சி என்று தெரியாது. சுமார் 4 அடி நீளம் உள்ள எதோ ஒரு குச்சி. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் முன்விரோதத்தின் காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் ஒரு முறை விசாரித்தார்கள் மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.